ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# ஆரண தேசிகனின் ஆயிரம் அறிவுரைகள்

(ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். ஸோமயாஜி அக்னிஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹாதேசிக ஸ்வாமியிடம் கேட்டறிந்து தொகுத்தவை)

தொகுப்பு: ஸ்ரீமதுபயவே. மஹாவித்வான். திருமலை சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். யஜ்ஞவராஹ தாதயார்ய மஹாதேசிகன், மங்களகிரி

==============================================================================

## அறிவுரை 2. அடியார்க்கடிமை செய்திடுமின்.

பாகவதர்களுக்குக் கைங்கர்யம் பண்ணுங்கள்.

कर्मावलम्बकाः केचित् केचित् ज्ञानावलम्बकाः।
वयं तु हरिदासानां पादरक्षावलम्बकाः ।।

கர்மாவலம்ப$_3$கா: கேசித் கேசித் ஜ்ஞாநாவலம்ப$_3$கா: ।
வயம் து ஹரிதா$_3$ஸாநாம் பாத$_3$ரக்ஷாவலம்ப$_3$கா: ॥

\- முக்தக ச்லோகம்.

இது ஒரு தனிப்பாடல். தேசிகன் அருளியதாக வைபவப்ரகாசிகையில் உள்ளது. இதன் அர்த்தம்:

ஒரு சிலர் யாகயஜ்ஞாதி கருமங்களைப் பற்றிக்கொண்டவர். இன்னும் சிலர் ஜ்ஞானயோகத்தைப் பற்றிக்கொண்டவர். நாமோவெனில் திருமாலடியாரின் பாதுகைகளைப் பற்றிக்கொண்டவர்.

யாகயஜ்ஞங்கள் போலவும் பக்தியோகாதிகள் போலவும் பாகவத தாஸ்யமும் உய்யும் வழியாகும். நம் ஆத்மோஜ்ஜீவனத்திற்கு அவலம்பமாக நாம் அடியார்க் அடிமையைக் கொண்டுள்ளோம்.

இந்தச் சுலோகத்தை எந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்வாமி தேசிகன் அருளினார் என்றறிந்தால் அதன் பொருள் நமக்கு நன்கு புரியும். அவரிடம் அசூயை கொண்ட சில வைஷ்ணவர்கள் அவரது திருமாளிகையில் செருப்புத்தோரணம் கட்டினார்கள். அந்த அசூயாளுக்களும் வெட்கப்படும்படியாகத் தேசிகன் அருளிய நல்வார்த்தை இது. அந்த அளவுக்குப் பாகவதர்களைக் கௌரவித்தால், அவர்களுக்கு அடிமைப்பட்டால், நமக்கு நல்ல கதி தான். கர்மயோகமோ ஜ்ஞானயோகமோ தேவையில்லை.

*****************